ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2201/5 - 2020 නොවැම්බර් මස 09 වැනි සඳුදා - 2020.11.09
2201/5 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 09 ஆந் திகதி திங்கட்கிழமை
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆகிய என்னால், (393 ஆம் அத்தியாயமான) விசாரணை ஆணைக்குழுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய 2020, சனவரி மாதம் 09 ஆந் திகதிய 2157/44 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட அறிவித்தலின் மூலம் 2020, சனவரி மாதம் 09 ஆந் திகதி தாபிக்கப்பட்ட "2015, சனவரி மாதம் 08 ஆந் திகதி ஆரம்பமாகி 2019, நவெம்பர் மாதம் 16 ஆந் திகதி முடிவடைந்த காலப்பகுதியினுள் பதவிகளை வகித்த அரசாங்க உத்தியோகத்தர்கள், அரசாங்கக் கூட்டுத்தாபனங்களின் ஊழியர்கள், ஆயுதப்படைகள் மற்றும் பொலிஸ் சேவை ஆகியவற்றின் உறுப்பினர்களுக்கு ஏற்பட்டதாகச் சொல்லப்படும் அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பில் விசாரணை செய்து தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கான சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின்" தற்காலப் பணிகளை நிறைவேற்றி அதன் இறுதி அறிக்கையைச் சமர்ப்பிக்க வேண்டிய 2020, யூலை மாதம் 09 ஆந் திகதி முடிவுறும் ஆறு மாத காலத்தை, சொல்லப்பட்ட சட்டத்தின் 4 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு, 2020, யூலை மாதம் 08 ஆந் திகதிய 2183/26 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட அறிவித்தலின் மூலம் 2020, நவெம்பர் மாதம் 09 ஆந் திகதி வரை, ஆறு மாத காலம் நீடிக்கப்பட்டதுடன், மீண்டுமொருமுறை சொல்லப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு 2020, நவெம்பர் மாதம் 09 ஆந் திகதியிலிருந்து 16 நாட்களுக்கு, அதாவது 2020, நவெம்பர் மாதம் 25 ஆந் திகதி வரை இத்தால் நீடிக்கின்றேன்.

**கோட்டாபய ராஜபக்ஷ,**
சனாதிபதி.

சனாதிபதி அலுவலகம்,
கொழும்பு 01,
2020, நவெம்பர் 09.

1A - G 32829 — 385 (2020/11) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.
இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.